Registered as a News Paper in Sri Lanka: பக்கங்கள்: 04 விலை ரூபா: 3-50

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம் 01 பிரமோதூத ஹு ஐப்பசி மீ 26 உ திங்கட்கிழமை (12 - 11 - 1990) ஹிஜ்ரி 1411 ர. ஆகிர். 23 ஓசை 258

## அங்கக்குறைவுடன் பிறந்த பெண் குழந்தை

(கொடிகாமம்)

சாவகச்சேரிக்குச் சமீபத்திலுள்ள கல்வயல் கிராமத்தில் அங்கக் குறைவுள்ள பெண் குழந்தை ஒன்று பிறந்துள்ளது. இந்தக் குழந்தை அந்த ஊரைச் சேர்ந்த விவசாயி ஒருவருக்குப் பிறந்துள்ளது. மூக்கும், செவிகளும் இருக்கும் இடத்தில் சிறுதுவாரங்களே இருக்கின்றன. இந்தக் குழந்தை பிறந்து பத்து நாட்களாகின்றன.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## 17 வீதமான முஸ்லிம்களுக்கு 30 வீதத்தை

# நாம் கொடுக்க முன்வந்தோம்;

# அவர்கள் காட்டிக்கொடுத்தனர்

## மக்கள் முன்னணி செயலாளர் யோகி தெரிவிப்பு

(கிளிநொச்சி)

**முஸ்லிம்களுடன் ஒற்றுமையாக வாழவேண்டும் என்பதை மட்டும் கருத்திற்கொண்டு வடக்கு கிழக்கு மக்கள் தொகையில் பதினேழு வீதம் மட்டுமுள்ள அவர்களுக்கு முப்பது வீதத்தை விட்டுக் கொடுப்பதாக அவர்களுடன் நல்ல முறையில் அணுகி பேச்சுவார்த்தை நடாத்தினோம். அப்படியிருந்தும் கிழக்கில் அவர்கள் செய்த துரோகத்தினால் நாம் பெரும் இழப்பைச் சந்திக்க வேண்டியிருந்தது.**

இவ்வாறு கிளிநொச்சியிலுள்ள அரச உயர் அதிகாரிகள் மத்தியில் பேசிய விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிச் செயலாளர் திரு. யோகரெட்ணம் யோகி கூறியுள்ளார். விடுதலைப் புலிகளின் வன்னி மாவட்ட அரசியல் பொறுப்பாளர் திரு. சிலன் தலைமையில் கிளிநொச்சி இந்து மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற இக் கூட்டத்தில் திரு. யோகி மேலும் பேசுகையில்:

அண்மையில் கிழக்கு மாகாணத்தில் நாலாயிரம் தமிழ் மக்கள் கொல்லப்பட்டுள்ளனர். திருமலையிலிருந்து நான்கு இலட்சம் தமிழ் மக்கள் தமது சொத்துக்களை, உயிர்களை, கற்பை இழந்து அகதிகளாக வெளியேறியுள்ளனர். அம்பாறை மாவட்டத்திலிருந்து ஒரு இலட்சம் தமிழ் மக்கள் வெளியேறியுள்ளனர்.

கொலை செய்யப்பட்ட நாலாயிரம் தமிழர்களில் இரண்டாயிரம் தமிழர்கள் முஸ்லிம்களாலும், மிகுதி இரண்டாயிரம் பேர் இராணுவத்தினராலும் கொலை செய்யப்பட்டனர்.

தற்போது கிழக்கு மாகாணத்தில் இராணுவத்தைக் கண்டுபயப்படுவதிலும் பார்க்க முஸ்லிம்களைக் கண்டே தமிழ் மக்கள் கூடுதலாகப் பயப்படுகிறார்கள்.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## 'ரெலோ' முக்கியஸ்தர் மனைவி இராணுவத்தால் மானபங்கம்

(மட்டக்களப்பு)

ரெலோ முக்கியஸ்தரின் மனைவி சிறிலங்கா இராணுவத்தினரால் கொடூரமான முறையில் பாலியல் வன்முறைக்கு உட்படுத்தப்பட்டார்.

கடந்த வியாழன் இரவு மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள முகத்துவாரம் என்னும் இடத்தில் வைத்து 'ரெலோ' இயக்கத்தைச் சேர்ந்த பாஸ்கரன் என்பவரின் மனைவியை சிறிலங்கா இராணுவத்தினர் இழுத்துச்சென்று பாலியல் வன்முறைக்குள்ளாக்கியுள்ளனர். (மு)

## மட்டக்களப்பில் கிரனைட் வீச்சு; ஒரு போலிஸார் பலி; சிலர் காயம்

(மட்டக்களப்பு)

சிறிலங்காப் பொலிஸார் மீது விடுதலைப் புலிகள் கிரனைட் வீசியதில் ஒரு பொலிஸ் பலியானார்.

மட்டக்களப்பு பாலத்தடியில் நின்ற சிறிலங்காப் பொலிஸார் மீது கடந்த திங்கட்கிழமை காலை எட்டு மணி அளவில் விடுதலைப் புலிகள் கிரனைற் தாக்குதல் மேற்கொண்டதில் ஒரு பொலிஸ் பலியானார், சிலர் காயமடைந்தனர். (மூ)

## அதிபர், உப அதிபர்கள் பாடசாலைக்குவருவதில்லை

(யாழ்ப்பாணம்)

சுண்டுக்குளி மகளிர்கல்லூரியில் அதிபர், உப அதிபர்கள் பாடசாலைக்கு சமுகம் கொடுக்காததினால் பல நாட்கள் அவர்களின் நாற்காலிகள் கவனிப்பாரற்றுக் கிடக்கின்றன.

கடந்த மாதம் யாழ். குடாநாட்டில் உள்ள பாடசாலைகள் அனைத்தும் மீண்டும் திறக்கப்பட்டன. ஆனால் சுண்டுக்குளி மகளிர் கல்லூரியில் அதிபரோ, உப அதிபரோ இது வரை கல்லூரிக்கு வந்து கடமை புரியவில்லை.

மிகவும் பாதிப்படைந்துள்ள பகுதியில் உள்ள பாடசாலைகள் கூட மீண்டும் திறக்கப்பட்டிருப்பதும், அதிபர்கள் கடமைக்குத் திரும்பியிருப்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

## புத்தளத்தில தமிழர் லொறிகள் முஸ்லிம்களால் கொள்ளை

(கிளிநொச்சி)

தமிழர்களின் லொறிகளை வழிமறிப்பதிலும், பணங்களைக் கொள்ளையடிப்பதிலும் தற்போது முஸ்லிம்கள் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர். ஆயுதப்படையினரும் இம் முஸ்லிம்களுக்கு உதவியாகச் செயற்படுகிறார்களாம்.

பூரியா பசளையைக் கொள்வனவு செய்வதற்காகக் கிளிநொச்சியிலிருந்து கொழும்பு சென்ற லொறி ஒன்று முஸ்லிம்களால் வழி மறிக்கப்பட்டுப் பணம் கொள்ளையடிக்கப்பட்டது.

இச்சம்பவம் புத்தளத்தில் இடம்பெற்றது. கிளிநொச்சியில் பசளை, கிருமிநாசினி முதலியவற்றை விற்பனை செய்யும் ஸ்தாபனம் ஒன்று கிளிநொச்சியில் பசளை, உரம்

(4ஆம் பக்கம் பார்க்க)

## அதிகரிப்பு

(பண்டத்தரிப்பு)

கடந்த இரண்டு நாட்களாக மாதகல், கீரிமலை, காங்கேசன்துறைக் கடற்பகுதியில் சிறிலங்கா கடற்படை பீரங்கிக் கப்பலின் நடமாட்டம் அதிகரித்துக் காணப்படுகிறது.

## கொழும்பு திரும்புகின்றனர்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திலுள்ள சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதியும் அவருடைய சகாவும் யாழ்ப்பாணத்தில் தமது சேவைக்காலம் முடிந்து இன்று கொழும்பு திரும்புகின்றனர்.

இவர்களுடன் நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணம் வந்த செம்பிறைச்சங்கப் பிரதிநிதியும் கொழும்பு பயணமாகின்றார். (லோ)

## வைத்திய பொறுப்பதிகாரி பதவி ஏழு வருடங்களாக வெற்றிடம்

(பண்டத்தரிப்பு)

கடந்த 7 வருடங்களாக பண்டத்தரிப்பு அரசினர் கிராமிய வைத்தியசாலையில்வைத்திய பொறுப்பதிகாரிப் பதவி வெற்றிடமாக உள்ளது. இதனால் நோயாளர்கள் பெரும் சிரமத்தை எதிர்நோக்கியுள்ளார்கள்.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## விமானங்கள் ஆஸ்பத்திரிமீது தாக்குதல் நடத்தவில்லையாம்

(கொழும்பு)

யாழ். ஆஸ்பத்திரிமீது இந்த மாதம் 9 ஆம் திகதி சிறிலங்கா விமானப் படையினரால் தாக்குதல் நடத்தப்படவில்லை என பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் சிறில் ரணதுங்கா தெரிவித்தார்.

அத்தோடு யாழ். ஆஸ்பத்திரி மீதான தாக்குதல் தொடர்பாகச் சர்வதேசசெஞ்சிலுவைச் சங்கம் விடுத்துள்ள புகாரையும் மறுத்துள்ளார்.

அதேவேளை இத்தாக்குதலால் ஆஸ்பத்திரிக் கட்டடம் சேதமானதும், ஐவர் காயம் அடைந்ததும் தெரிந்ததே.

இதற்கு முன்னதாக சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் இரண்டு முறைகள் வட்டமிட்டவிமானம் குண்டுகளைப் போட்டது என்றும், விமானத்தில் இருந்து பார்த்தால் தெரியுமளவிற்கு வெள்ளைக் கொடிகள் பறக்க விட்டிருப்பதாகவும், சிறிலங்கா விமானம் குண்டு போடும்போது விடுதலைப் புலிகள் பாதுகாப்பு வலயத்தில் இல்லை என்றும் தெரிவித்திருந்தது.

ஆனால் ரணதுங்கா இந்தப்

(4ஆம் பக்கம் பார்க்க)

## மிதிவெடியால் 3 சிப்பாய்கள் கால்களை இழந்தனர்

(மன்னார்)

சிறிலங்கா இராணுவச் சிப்பாய்கள் மூவர் நேற்று முன்தினம் விடுதலைப்புலிகளின் மிதிவெடியில் சிக்குண்டு தமது கால்களை இழந்துள்ளார்கள்.

மன்னார் இலங்கை வங்கிக் கிளைக் கட்டடத்தில் முகாமிட்டிருக்கும் சிறிலங்கா இராணுவச்சிப்பாய்கள் மூவரே விடுதலைப்புலிகளின் மிதிவெடியில் சிக்கித் தமது கால்களை இழந்தவர்களாவர். (மு)

## க. பொ. த. பரீட்சை விண்ணப்பங்கள்

## பூர்த்தி செய்த படிவங்களை நாளை சமர்ப்பிக்கவும்

கல்விப் பொதுத் தராதரப்பத்திர சாதாரணதரப் பரீட்சை - டிசம்பர், 1990க்கான விண்ணப்பங்களை இது வரை காலமும் சமர்ப்பிக்காத அதிபர்கள், பூர்த்தி செய்யாத விண்ணப்பப் படிவங்களை நாளை நண்பகலுக்கு முன்னதாக யாழ். கல்வித் திணைக்களத்தில் சேர்ப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளார்கள். விண்ணப்பப்படிவங்களை இது வரை பெறாத அதிபர்கள், அவற்றை உடன் கல்வித் திணைக்களத்தில் பெற்றுப் பூரணப்படுத்தி உரிய கொடுப்பனவுகளுடன் நாளை நேரில் கையளிக்குமாறு கல்வித் திணைக்களச் செய்திக் குறிப்பொன்று தெரிவிக்கிறது.

## அதிபர்களுக்கானபதவி உயர்வு விண்ணப்பங்கள் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

பாடசாலைகளில் சேவையில் உள்ள 2ஆம், 3ஆம் தர அதிபர்களுக்கான பதவி உயர்வுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. 28-09-90 திகதிய 630ஆம் இலக்க வர்த்தமானியில் கோரப்பட்டுள்ள இவ் விண்ணப்ப முடிவுத் திகதி 29-10-90 ஆகும். எனினும் யாழ். மாவட்டத்திற்கு இவ் வர்த்தமானி 09-11-90 அன்றே கிடைத்தமையைக் காரணம் காட்டி சேவையிலுள்ள 2ஆம், 3ஆம் தர அதிபர்கள் கோட்டக் கல்வி அதிகாரிகளினூடாக பிரதேசக் கல்விப் பணிப்பாளருக்கு விண்ணப்பிக்கும் ஏற்பாடொன்றை யாழ். கல்வித் திணைக்களம் மேற் கொண்டுள்ளது. எனவே சம்பந்தப்பட்டவர்கள் அசிரத்தை காட்டா

(4ஆம் பக்கம் பார்க்க)

**வரிவிளம்பரம்**

### டில்கா வாச் வேக்ஸ்
### DILKA WATCH WORKS

வாடிக்கையாளரின் வசதிக் கமைய எமது ஸ்தாபனம் மானிப்பாய் வீதி, ஆனைக் கோட்டையிலும் இல. 3 சித்தன்கேணி றோட், பண்டத்தரிப்பிலும் இயங்குகின்றது. சகல மணிக்கூடுகளும் றேடியோக்களும் உத்தரவாதத்துடன் திருத்திக் கொடுக்கப்படும். சகல எலக்ரோனிக் பற்றறிகளும் விற்பனைக்கு உண்டு. (B-1554)

### ரதிவோச் வேக்ஸ்

ரதிவோச் வேக்ஸ் அன் ஸ்ரோர்ஸ் இல 14 கஸ்தூரியார் வீதியிலிருந்து இல 12 பொன்னையா லேன் ஆறுகால்மடம் ஆனைக்கோட்டையில் (பிடாரி கோயில் உபதபால் அலுவலகத்துக்கு அருகில்) இயங்கி வருகின்றது. என்பதை எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம். திருத்துதல் வேலையும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

(B. 1580)


# காரைநகரில் மாவீரர்தினம்

தமிழ் மண்ணிற்காக உயிர் நீத்த தியாகச் சுடர்களை நினைவு கூரும் முகமாக தமிழீழத்தில் நடைபெற இருக்கும் மாவீரர் வாரத்தை காரைநகரில் கொண்டாடுவதற்காக அலங்கார வளைவுகளும் அலங்காரப்பந்தல்களும் வீதிகள் தோறும் போடப்பட்டு வருகின்றன.

காரைநகர் மண்ணில் பிறந்து தாயகத்திற்காக உயிர் நீத்த இருபத்திநான்கு வீரர்களையும் தனித்தனி நினைவு கூரும் முகமாக சிற்றூரவைகள் ஆங்காங்கே தனித்தனியான அலங்காரப் பந்தல்களை சந்திகள் தோறும் அமைத்து வருவது மட்டுமன்றி 24 வீரர்களின் நினைவுச் சின்னமாக நினைவுத்தூபி ஒன்றினையும் அமைத்து வருவது குறிப்பிடத்தக்கதாகும்.

மாவீரர் வாரத்தை வெகு விமரிசையாக நடாத்துவதற்காக காரைநகர் பிரதேசப் பொறுப்பாளர் சுதா தலைமையில் மாவீரர் தின கொண்டாட்ட குழுவொன்று அமைக்கப்பட்டு துரிதகெதியில் செயற்பட்டு வருகின்றது.

## ஆயுர் வேத மருந்துகளுக்குத் தட்டுப்பாடு

(ஊர்காவற்றுறை)

யாழ். குடாநாட்டில் பிரதேச சபைகளினால் நிர்வகிக்கப்பட்டுவரும் இலவச சித்த ஆயுர்வேத வைத்தியசாலைகளில் மருந்துகளிற்கு பெரிதும் தட்டுப்பாடுகள் நிலவுவதாக தெரிவிக்கப்படுகிறது.

தென்பகுதியில் உள்ள அரச ஆயுர்வேத மருந்துக் கூட்டுத்தாபனத்திலிருந்தே மருந்துகள் இங்கு தருவிக்கப்பட வேண்டியுள்ளது. இப்பகுதியில் ஒரு குறிப்பிட்ட அளவு சித்தமருந்துகள் கொள்வனவு செய்யவேண்டிய வசதியிருந்தும் இப்பகுதி பிரதேசசபைகளிடம் போதியநிதி வசதியின்மையால் அவை கொள்வனவு செய்யப்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது. (24)


பொருளியலாளர்
அமரர்
# கிருஷ்ணானந்தன்
# நினைவுப் பேருரை

இடம்: கைலாசபதி கலையரங்கு
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

காலம்: 12-11-90 இன்று பிற்பகல் 2.30மணி.

அனைவரும் தவறாது சமுகமளிக்கவும்

செயலர்
அமரர் கிருஷ்ணானந்தன்
நினைவுப்பணிமன்றம்
யாழ்ப்பாணம்

(B - 1583


### ஆஸ்பத்திரி மீதான தாக்குதல்
# செஞ்சிலுவை புகார் மீது உடனடி விசாரணையாம்

(கொழும்பு)

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வளவுக்குள் விமானப்படையினரால் குண்டு போடப்பட்டதான சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் புகார் குறித்து பாதுகாப்பு இணைஅமைச்சர் ரஞ்சன் விஜேரட்னா உடனடி விசாரணையை மேற்கொள்ளவிருப்பதாக தெரிவித்துள்ளார்.

இதேவேளை பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சிறில் ரணதுங்கா பி. பி. சிக்கு பேட்டியளித்தபோது இந்தக் குண்டுவீச்சு சம்பவம் ஆனது தவறுதலாக நடைபெற்றது என்றும், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் தமது நிபந்தனைகளை பகிரங்கமாக அறிவித்திருந்தபோதும் தமது படையினருக்கு இதுபற்றி தெரியாதிருந்திருக்கலாம் என்றும் தெரிவித்தார்.


## 2ஆம் வருட நினைவஞ்சலி

உதயம் 10-01-1951
உதிர்வு 12-11-1988

### உயர்திரு. நாகேந்திரம் கிருஷ்ணானந்தன்

மாணவருக்குக் கல்வியைப் போதித்து
மண்ணில் அவர்கள் புகழ் பெறவே
ஈழ மண்ணில் உதித்த ஆசானே!
கதிரவன் உதிக்குமுன் என்றும் போல்
அன்றும் புறப்பட்டீர் கடமைக்கு
வஞ்சகர் கையிற் சிக்குண்டு
வதைபட்டிறந்து போனீரே!!
முறுவல் மாறா உம் முகத்தை
மூர்க்கர் குதறி எறிந்தனரே
விடுதலைக்கு வித்தானீர்
விடியலானீர் எமக்கெல்லாம்
ஆண்டு இரண்டு கடந்தாலும்
அகலுமோவும் நினைவென்றும்
உள்ளம் வெதும்பி வாடுகிறோம்
உமது நினைவை மீட்டுகிறோம்

நொதேன் இன்ஸ்ரியூட்
1990ஆம் ஆண்டு பொருளியல் மாணவர்,
ஆசிரியர்கள். நிறுவனத்தினர்,

B 826


### அவலவேளையில் சைக்கிள் திருட்டு

(குருநகர்)

கடந்த வெள்ளி காலை 7-30 மணியளவில் இரு பொம்மர் விமானங்கள் யாழ்நகர், கொக்குவில் பகுதிகளிக் குண்டு வீச்சு நடத்திக்கொண்டிருந்த வேளை அச்சமடைந்தஒருவர் தனதுபுதிய ஏசியா சைக்கிளை பூட்டாமல்விட்டுவிட்டுஅடைக்கலம்தேடினார். திரும்பிவந்து பார்க்கையில் சைக்கிள் திருடுப்போயிருந்தது.

இந்தச் சம்பவம் யாழ். கே. கே. எஸ். வீதி நாச்சிமார் கோயிலடியில் நடைபெற்றது. கோயில் வாசலில் சைக்கிளை விட்டுவிட்டுக் கோயிலுக்குள் பாதுகாப்புத் தேடிச்சென்றபொழுதே சைக்கிள் திருட்டுப் போனதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அடுத்தடுத்து அதே இடத்தில் இத்துடன் ஏழு சைக்கிள்கள் திருட்டுப் போயிருப்பதாகவும் அறியப்படுகிறது. ஏழாலையைச் சேர்ந்த பாலசுப்பிரமணியம் என்பவரது சைக்கிளே திருட்டுப் போனதாகத் தெரிவிக்கப்பட்டது.(21)

### மாவீரர் நூல் நிலையம்

(புங்குடுதீவு)

இந்த மாதம் இருபத்தோராம் திகதி முதல் இருபத்தியேழாம் திகதி வரை தமிழீழப் பகுதி எங்கும் கொண்டாடப் படவிருக்கும் மாவீரர் வாரத்தில் புங்குடுதீவு கிழக்கு ஆலடிப் பகுதியில் விடுதலைப் போரில் வீரமரணமடைந்த வேங்கைகளின் நினைவாக 'மாவீரர் நூல் நிலையம்' ஒன்று திறந்து வைக்கப்படவுள்ளது.

இப்புகுதி சித்ராலயா நாடக மன்றத்தினரால் ஆரம்பித்து வைக்கப்பட இருக்கும் இந்த நூல் நிலையத்தையும் அதன் சுற்றுப்புறத்தையும் மாவீரர் வாரத்தில் சிரமதானம் மூலம் திருத்தி அமைக்க உள்ளனர்.


## 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

### சினைப்பர் பவான்
(வி. பஞ்சாட்சரநாதன்)
பொறுப்பாளர் : பொலிகண்டி

ஜனனம்: 01-02-1967
வீரமரணம்: 11-11-1986

சிறிலங்கா இராணுவத்துடனான நேரடி மோதலில் பருத்தித்துறையில் வீரமரணம் அடைந்தார்.

செல்வச்சந்நிதி கோவிலடி
தொண்டமானாறு

தகவல்;-
குடும்பத்தினர்
(R-824)



## ஜெயா பான்ஸி ஹவுஸ்

எமது ஸ்தாபனம் இன்று முதல் (12-11-90) இருந்து மீண்டும் பழைய இடத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்பதை வாடிக்கையாளர்களுக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

160, நவீன சந்தை
யாழ்ப்பாணம்.

(R/825)



## கணக்காளர் நேர்முகப் பரீட்சை

மேற்படி சமாசத்தில் கணக்காளர் பதவிக்கு விண்ணப்பம் அனுப்பி வைத்தோருக்கான நேர்முகப் பரீட்சை 18. 11. 90 ஞாயிற்றுக்கிழமை காலை 09. 00 மணிக்கு திருநெல்வேலி யாழ். மாவட்ட விவசாய பயிற்சி நிலையத்தில் அமைந்துள்ள சமாசக் காரியாலயத்தில் நடைபெறும்.

இப்பதவிக்கான அடிப்படைத் தகுதி உள்ளவர்கள் பிறப்பு அத்தாட்சிப்பத்திரம், கல்விச் சான்றிதழ்கள், அண்மையில் பெற்ற நற்சான்றிதழ்கள், அனுபவச் சான்றிதழ்கள் ஆகியவற்றின் மூலப் பிரதிகளுடன் உரிய நேரத்திறகுச் சமுகம் தரவும்.

தபால் விநியோகம் சீராக இல்லாமையால் இந்த அறிவித்தலைச் சகல விண்ணப்பதாரரும் ஏற்றுக்கொள்ளவும்.

பொதுமுகாமையாளர்,
வடமாகாண தெங்கு பனம்பொருள்
கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்

B/1576



## 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### செல்வி இராசுகி விவேகானந்தா
(வேம்படி மகளிர் பாடசாலை O/L மாணவி)

தோற்றம்: 13 - 03 - 1972
மறைவு: 24 - 10 - 1989
திதி 12 – 11 – 1990

எங்கள் அன்புச் செல்வமே! அன்ரி, அங்கிள் எனக் கேட்ட அருஞ் செவிகள் வேகுதம்மா. உன்னால் ஆக்கப்பட்ட ஓவியங்கள், பொருள்கள், பூந்தோட்டம் பார்க்கும் போதும் வயிறு எரியுதம்மா! நீ சென்ற திசை தெரியாமல் கதறுகிறோம் ஓராண்டாய்! என்ன தான் அழுது புரண்டாலும் காலனவன் திருப்பித் தருவானா எம் செல்வியை இனி எங்களுக்கு. உனது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

சுகி பவனம்
இந்துக்கல்லூரி ஒழுங்கை,
உரும்பிராய் வடக்கு.

உமது பிரிவால் துயருறும்:
அன்பு அங்கிள் அருணாசலம்,
அன்ரி சிவலக்ஷ்மிதேவி
மாமன் சோமசுந்தரம், (இணுவில்)
உற்றார், உறவினர்.

(R/793)


### தரிசு நிலங்களில் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படும்

புங்குடுதீவுப் பகுதியில் காணப்படும் தரிசு நிலங்களில் விடுதலைப் புலிகள் மகளிர் படைப் பிரிவினர் பயிர்ச் செய்கைகளை மேற்கொள்ளவுள்ளார்கள்.

இதற்காக இப் பகுதியில் காணப்படும் தோட்டநிலங்கள், வயல்நிலங்கள், காணிகள் என்பன இவர்களால் சுவீகரிக்கப் பட்டு அவற்றில் பயிர்ச்செய்கை போன்ற விவசாய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட உள்ளன.

மேற்படி தரிசு நிலங்களின் சொந்தக்காரரினால் இந்நிலங்களில் பயிர்ச் செய்கை முயற்சி ஏதும் மேற்கொள்ளப்படாத பட்சத்திலேயே அவை சுவீகரிக்கப் படுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. (22

## சிந்தனைக்கு

முனைப்பான கவனமே என் குறிக்கோள்
முதலில் கண்ணியம், அடுத்து ஊக்கம்,
அடுத்து முனைப்பான கவனம்.

— ஆண்ட்ரு கார்னகி

ஈழநாதம்

81, வைமன்வீதி, யாழ்ப்பாணம் 12-11-90
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025-2839 நிர்வாகபீடம்: 2208
த.பெ.எண் 05

# போராட்டமே அங்கீகாரம் பெற்றுத் தரும்

சர்வதேச ரீதியாக தமிழீழப் போராட்டத்திற்கும், விடுதலைப் புலிகளுக்கும் அங்கீகாரங்கள் படிப்படியாகக் கிடைத்து வருவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. ஒரு போராட்டத்திற்கு சர்வதேச அங்கீகாரம் பெறுதல் என்பது ஓர் இலகுவான காரியமல்ல. மக்களின் நியாய பூர்வமான உரிமைகளுடன் உறுதியான போராட்டமே சர்வதேச அங்கீகாரத்தைப் பெற்றுக் கொடுக்கும். வாய்ப் பேச்சும், பிரேரணைகள் அனுப்புதலும் ஒருபோதும் இந்தச் சர்வதேச அங்கீகாரத்தைக் கொண்டு வரப் போவதில்லை.

ஆரம்பத்தில் அடக்கப்பட்ட மக்களின் போராட்டம் எழுச்சி அடைகின்றபோது, அந்த எழுச்சி சர்வதேச நாடுகளை குறிப்பாக சர்வதேச மக்களைச் சென்றடைவதில்லை. ஏனெனில் அடக்குமுறையாளர்களின் -ஆட்சியாளர் - கட்டுப்பாட்டிலேயே ஒழுங்கமைக்கப்பட்ட தொலைத்தொடர்பு சாதனங்கள், வெகுசனத்தொடர்பு சாதனங்கள் இருப்பதினால் அவர்களின் செய்திகளே சர்வதேச மக்களைச் சென்றடைகின்றன. இதன் காரணமாக ஆரம்பத்தில் அடக்குமுறையாளர்களின் கைகள் ஓங்கியே இருக்கின்றன. ஆனால் காலப்போக்கில் வலுவானதும், தொடர்ச்சியானதுமான போராட்டங்கள் சர்வதேச மக்கள் உண்மை நிலையை அறிய வாய்ப்பை உருவாக்குகின்றன.

அதேவேளை ஒரு நாட்டின் வெளியுறவுக் கொள்கையானது அந்நாட்டின் நலனின் அடிப்படையிலேயே வகுக்கப்படுகின்றன. அரசியலைப்பொறுத்து இந்த நாடுகளுக்கு நிரந்தர நண்பனும் இல்லை; எதிரியும் இல்லை. இந்தநிலையில் ஒரு நாட்டில் அடக்குமுறை நிகழ்கின்றது என்கின்றபோதிலும் மற்றைய நாடு தனது உறவில் உடனடி மாற்றம் செய்வதில்லை. இது ஒரு அரசின் பொதுவான நிலைப்பாடாகும். ஆனால் அந்நாட்டு மக்களின் நிலை அவ்வாறானதாக இருப்பதில்லை மக்கள் எப்பொழுதும் அடக்குமுறைக்கு எதிரானவர்களே. போராட்டங்கள் நடைபெறும் நாடுகளில் இருந்து பிரச்சினைகளின் உண்மைவடிவம் மக்களைச் சென்றடைய வெகு காலம் பிடிக்கும். அவ்வாறு மக்கள் மத்தியில் பிரச்சினைகளின் உண்மை வடிவம் சென்றடைந்த பின்னர் அந் நாட்டு அரசாங்கங்கள் விரும்பியோ விரும்பாமலோ தமது இலாபத்தை இழந்தாவது சில கொள்கை மாற்றங்களை செய்தே ஆகவேண்டும்.

இலங்கைத் தமிழரின் உண்மையான பிரச்சினை அண்மைக்காலமாக உலக மக்களின் கவனத்தை ஈர்த்து வருகின்றது. ஆனால் அநேக வெளிநாட்டார் இன்றும் பிரச்சினையின் வடிவத்தை உணரவில்லை. ஏன்? இலங்கையில் சிங்கள மக்களும் அண்டை நாடான இந்திய மக்களுமே எமது பிரச்சினையைத் தெளிவாக உணரவில்லை ஏனெனில், மக்கள் பிரச்சினை பற்றி உணராத அளவிற்கு திரிபானதும் குழப்பமானதுமான செய்திகளை வெளியிடும் தகவல் சாதனங்கள் மக்கள் உண்மையை அறியாத அளவில் ஏமாற்றியுள்ளன.

அதேவேளை ஒரு பிரச்சினையின் முக்கியத்துவம் உலக நாடுகளின் நலனுடன் நேரடியாகத் தொடர்புபட்டதினால், அந்நாடுகள் தாம் பெறக்கூடிய இலாபத்திற்கு ஏற்ற அளவில் அவை பிரபல்யப்படுத்தப்படுகின்றன. எடுத்துக்காட்டாக தென் ஆசியாவில் குறிப்பாக இலங்கையில், இந்தியாவின் ஆதிக்கம் இனப்பிரச்சினை சர்வதேச அரங்கிற்குச் செல்வதற்குத் தாமதத்தை ஏற்படுத்தியது. இலங்கையின் இனப்பிரச்சினை தன்னையும் மீறி சர்வதேச அரங்கிற்குள் செல்வதும், அது தொடர்பாக சர்வதேச நாடுகள் அதை நோக்கி இழுக்கப்படுவதையும் இந்தியா விரும்பவில்லை; அதேவேளை இந்தியாவிற்கு எதிராக வெளிப்படையாக நடந்து கொள்ள விரும்பாத உலக வல்லரசுகளும், நாடுகளும் இப்பிரச்சினையை சர்வதேச ரீதியில் பெரியளவில் எழுப்பவும் முன்வரவில்லை.

அதேவேளை பாலஸ்தீனியப் பிரச்சினை, ஆப்கான் பிரச்சினை என்பன சர்வதேச பிரச்சினைகளாக சகல நாடுகளாலும் ஆக்கப்பட்டு விட்டன. உலக நாடுகளின் நலன்கள் இவற்றோடு நேரடியாகச் சம்பந்தப்பட்டிருப்பதால்,பிரச்சினைகள் மக்களைச் சென்றடைந்துவிட்டன.

அதேபோன்று இன்று,இலங்கையில் இனப்பிரச்சினை சிறிலங்கா, இந்திய விருப்பு வெறுப்புக்களை மீறி சர்வதேச பிரச்சினையாக மாறிவருகின்றது. சில உலக நாடுகளின் மறைமுக அங்கீகாரத்தையும் பெற்றுள்ளன. இன்று உலகில் 52 நாடுகளில் புலிகளின் கிளைகளும் உள்ளன.

அத்தோடு, இன்று சர்வதேச விடுதலை இயக்கத் தலைவர்களில் செயற்பாடு மிக்க தலைவர் என்றபெயரை விடுதலைப் புலிகள் இயக்கத்தலைவர் பிரபாகரன் பெற்றுள்ளார்.

இவ்வாறாக உலக மக்களின் கவனத்தை ஈர்த்து வரும் தமிழீழமக்களின்போராட்டத்தைபடிப்படியாக உலக நாடுகள் அங்கீகரித்தே ஆகவேண்டும் என்ற நிலை போராட்டத்தின் வேகத்தினாலும், உறுதியினாலும் ஏற்படப்போவது நிச்சயமானது.

---

11

25. 9. 90 அன்று திரு.மாத்தயா அவர்களைப் பார்க்க கூடியிருந்த மக்களிடம் சென்று நிலைமையை உரையாடிப் பார்ப்போம் என நினைத்தேன். ஒரு சைக்கிளுடன் மரத்தடியில் நின்ற ஒருவரிடம் சென்றேன். ''உங்கள் ஊர் எது?'' என்றுகேட்டேன். ''தம்பலகாமம்'' என்றார். தம்பலகாமத்திற்கும் இந்த இடத்திற்கும் எக்கச்சக்கமான தூரமாயிற்றே ஏன் யாழ்ப்பாணப் பக்கம் போகாமல் இந்தப் பக்கமாக ஓடிவந்தீர்கள்? என்றுகேட்டேன். யாழ்ப்பாணம் நோக்கிப் போகும் ஆட்களை இரவில் மறைந்திருந்து தாக்குவதால் இந்தப் பக்கமாக ஓடி வந்ததாக சொன்னார். தம்பலகாமத்தில் தான் நிறைய சம்பவங்கள் நடந்துள்ளனவே அங்கு நடந்தவற்றைக் கூறுங்கள் என்றேன்.

நீங்கள் என்னென்ன விடயங்கள் அறிந்தீர்கள் என்று கேட்டார். அகதிமுகாம் விடயங்கள், கிண்ணியாவில் தமிழர்களை தடுத்து வைத்திருத்தல், பஸ்ஸில் இருந்து

வைத்திருக்கக் கூடாது என்ற பள்ளிவாசலின் முடிவு அனைவருக்கும் தெரிவிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து தமது வீடுகளில் இருந்த தமிழர்கள் அனைவரையும் முஸ்லிம்கள் வெளியேற்றினார்கள். அத்துடன் ஒரு பகல் கொள்ளையும் நடந்தது என்றார். என்ன நடந்தது, என்று கேட்டேன்.

தமிழர்களின் ரீ.வி., டெக், றேடியோ போன்ற விலையுயர்ந்த சாமான்களை வைத்திருந்த முஸ்லிம் வீட்டுக்காரர்கள் அனைவரும் தங்களது சாமான்களை நாம் வைத்திருந்தால் எமக்கு ஊர்காவல் படையாலோ, இராணுவத்

தெரியுமா என்று கேட்டேன். பாருக் என்பவன் தலைமையில் ஜிகாத் இயக்கத்தைச் சேர்ந்த ஐம்பது பேர் ஈரோஸ் இயக்கத்தின் பெயரால் இந்திய இராணுவத்திடம் பயிற்சி எடுத்தனர். இன்று இவர்கள் தான் ஊர்காவல் படையில் சேர்ந்து தமிழரை அழிப்பதில் தீவிரமாக இருக்கின்றனர் என்றார். மழை விட்டும் தூவானம் போகவில்லை என்பதா? அல்லது இந்திய இராணுவம் விதைத்த நச்சு விதைகள் இன்று விருட்சமாகின்றதா? பதில் தெரியாது விழித்தேன்.

அப்போது பதுமன் ஈ.பி.ஆர்.எல்.எவ்.இல்இருந்த கச்சிமுகம்மதுஷேக்அப்துல்லா என்ற முஸ்லிம் இளைஞனை தேசிய இராணுவத்தின் மீதான நடவடிக்கையின் போது கைது செய்தோம். முஸ்லிம் இளைஞன்என்பதால் மன்னித்தோம். சிலகாலம் எமது இயக்கத்தில் இருக்க அனுமதித்தோம். இவனுக்கு இந்தப் பகுதிப் பாதைகள், நாம் எங்கெங்கு இராணுவத்

## உதிக்கும் திசை நோக்கி உன்னத பயணம்...



ஆட்களை இறக்கியெடுத்தல், இந்திய இராணுவம் பின்னர் ஊற்றிக் கொழுத்தியது...... என்று பட்டியல் போட்டுக் காட்டினேன்.

''தம்பலகாமம் கோவிலடி முகாம் தான் மிகப் பயங்கரமானது'' என்ற முன்னுரையுடன் கூறத்தொடங்கினார். தம்பலகாமம் இராணுவ முகாம் பொறுப்பதிகாரி ஒரு நாள் பொதுமக்களைக் கூப்பிட்டுக் கூறினான்:'' இங்கு 18 குடும்பங்கள் புலிகளின்நெருங்கிய ஆதரவாளர்கள் என்ற தகவல் எனக்குக்கிடைத்துள்ளது. இவர்களை அழிப்பது எனக்குப் பெரிய விடயமல்ல, ஜே வி. பி. பிரச்சினையில்ஐம்பது சிங்கள இளைஞர்களை எனது கையால் கொன்றுள்ளேன். எனது சொந்த இனத்திலேயே ஐம்பதுபேரைக் கொன்ற எனக்கு இது ஒரு சின்ன விடயம்'' என்று கூறினான் என்றார்.

முஸ்லிம் மக்களால் ஏற்பட்ட பிரச்சினைகளைச் சொல்லுங்கள் என்றேன். முன்னரெல்லாம் கலவரம் வரும்போது முஸ்லிம் மக்கள் தான் உதவுவார்கள். இந்த முறை எல்லாம் தலைகீழாக நடக்கிறது என்று சொன்னார். ஏன் என்று கேட்டேன். பள்ளிவாசல் மட்டத்தில் தமிழருக்கு எதிரான முடிவுகள் மேற்கொள்ளப்படுவதுதான் காரணம் என்றார். தொடர்ந்து இந்த முறையும் கலவரம் வந்தவுடன் கிண்ணியாவையும் அதனைச் சுற்றியுள்ள முஸ்லிம் கிராமங்களையும் நோக்கித்தான் தமிழர் ஓடினார்கள், ஆனால் அங்கே நடந்த விடயங்களைப் பார்த்தால் ... என்று சொல்லி சற்று நிறுத்திவிட்டு தம்பலகாமம் கூட்டாம் புளியைச் சேர்ந்த நடராசாவும் நிறைமாதக் கர்ப்பிணியான அவரது மனைவி பங்கயலட்சுமியும் காக்காமுனை என்ற இடத்தில் ஒரு முஸ்லிம் வீட்டில் குடியிருந்தனர். அங்கே பங்கயலட்சுமிக்கு ஒரு குழந்தை பிறந்தது. குழந்தை பிறந்த மூன்றாம் நாள் பங்கயலட்சுமி சாப்பிட்டுக் கொண்டிருக்கும் போது ஒரு முஸ்லிம் இளைஞன் வந்து சாப்பாட்டுக் கோப்பைக்கு காலால் அடித்தான். கோப்பை பறந்தது. தொடர்ந்து தமிழர்களை எவரும் வீட்டில்

தாலோ பிரச்சினை வரும். ஆனபடியால் இவற்றை எமக்கு விற்றுவிட்டதாக எழுதிக் கொடுங்கள் என்று கேட்டிருந்தார்கள். அப்படியே

இனரை எதிர்பார்த்துக் காத்திருக்கிறோம் என்பதெல்லாம் தெரியும். இவன்தான் நாம் எதிர்பார்க்காத பாதையினுள்ளால் இராணுவத்தைக்

> இங்கு 18 குடும்பங்கள் புலிகளின் நெருங்கிய ஆதரவாளர்கள் என்ற தகவல் எனக்குக் கிடைத்துள்ளது. இவர்களை அழிப்பது எனக்குப் பெரிய விடயமல்ல. ஜே. வி. பி. பிரச்சினையில் ஐம்பது சிங்களஇளைஞர்களை எனது கையால் கொன்றுள்ளேன். எனது சொந்தஇனத்திலேயே ஐம்பது பேரைக்கொன்ற எனக்கு இது ஒரு சின்ன விடயம்.
>
> - தம்பலகாமம் கோவிலடி இராணுவமுகாம் பொறுப்பதிகாரி

அனைவரும் எழுதிக்கொடுத்தனர். நடராசாகூட அப்படி எழுதிக் கொடுத்து விட்டுத்தான் வெளியேறினார். ஆனால் எவருக்கும் ஒரு சதமும் கிடைக்கவில்லை என்றார். ஏன் இவர்களுக்கு நன்மை செய்வதற்காக இப்படி எழுதி வாங்கியிருக்கக் கூடாது? இவர்கள் திரும்பியதும் திருப்பிக்கொடுப்பதற்காக எழுதி வாங்கியிருக்க மாட்டார்களா? என்று கேட்டேன். நிச்சயமாக அப்படி இல்லை. பள்ளிவாசல் அறிவிப்பின் பின்னரே ஒரே நேரத்தில் இந்த விடயம் நிகழ்ந்துள்ளது. அத்துடன் வாங்கிய சாமானுக்காக இல்லாவிட்டாலும் வழிச்செலவுக்கு ஒரு பத்து ரூபா வைத்திருங்கள் என்று கொடுத்திருக்கமாட்டார்களா என்று வினாவினார்.

தமிழர் அழிப்பில் தீவிரமாக ஈடுபடுபவர்களின் பெயர்

கூட்டிவந்தவன் என்றார். தொடர்ந்து இன்னுமொரு முஸ்லிம் இளைஞன் ஒருநாள் இரவு மூன்று றைபிளையும் ஒரு வாக்கிடோக்கியையும் தூக்கிக் கொண்டு ஓடியிருக்கிறான். எமது முகாமிலிருந்து இராணுவமுகாமுக்குச் செல்லும் வழியில் ஆறு ஒன்று உண்டு. இருட்டில் இடம் தெரியாமல் ஆழமான பகுதியில் இறங்கிவிட்டான். ஆற்று நீரோட்டத்தில் ஆள் இழுத்துச் செல்லப்பட்டான். அத்துடன் அவனது சாரம் றைபிளுக்குள் சிக்கியதால் அவனால் நீந்தமுடியாமல் போய்விட்டது. மூன்று நாள் செல்ல ஒரு றைபிளுடன் இவனது சடலம் ஒதுங்கியது. மற்ற இரண்டும் ஆற்றில் எங்கேயோ கிடக்கிறது. ஊம்....சிலரை நம்பிக் கெட்டோம்! என்றார் பதுமன்.

(தொடரும்)

---

# ஜோர்ஜ்புஷ் - கோர்பசேவ் பாரிஸில் பேச்சுவார்த்தை

வளைகுடாப் பிரச்சினை குறித்து பேச்சுவார்த்தை நடத்த சோவியத் ஜனாதிபதி கொர்பசேவும், அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ்புஷ்ஷும் அடுத்த வாரம் பிரான்சின் தலைநகர் பாரிஸில் சந்திக்கவுள்ளனர்.

பாரசீக வளைகுடாப் பகுதியில் ஏற்பட்டு வரும் பதட்ட நிலை குறித்து இந்த இரண்டு தலைவர்களும் இரண்டாவது தடவையாக சந்தித்து பேசவுள்ளனர்.

இதற்கு முன்னோடியாக அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஜேம்ஸ் பேகர் ஐரோப்பிய நாடுகளின் தலைவர்களுடன் பேச்சுக்களை நடத்தினார்.

சோவியத் வெளியுறவு அமைச்சர் செவர்நாட்சே, ஜனாதிபதி கொர்பசேவ் ஆகியோருடனும் பேச்சுக்களை நடத்திய ஜேம்ஸ்பேகர் இப்போது பிரான்சின் ஜனாதிபதி மித்ரோனுடன் பேச்சுக்களை நடத்தினார்.

# கிழக்குமாகாண தமிழ் அகதிகளுக்கு தொற்றுநோய் அபாயம்

(மட்டக்களப்பு)

கிழக்கு மாகாணத்தில் வீடு வாசல்களை விட்டு அகதி முகாம்களில் வாழும் பெருந் தொகையான மக்கள் இப்பொழுது பெரும் தொற்று நோய் அபாயத்துக்கு ஆளாகி உள்ளனர்.

வாழைச்சேனை, வந்தாறுமூலை, சந்தனமடு போன்ற இடங்களில் அகதிமுகாம் வசதிகளும் அற்று மர நிழல்களின் கீழ் வாழும் இந்த ஆதரவற்ற மக்கள் நுளம்புக்கடியால் அவஸ்தைப்படுவதுடன் மலேரியா, வயிற்றோட்டம், வாந்திபேதி போன்ற நோய்களால் உயிரிழந்தும் வருவதாக அண்மையில் கிழக்கு மாகாணத்தில் இருந்து அவஸ்தைகளுக்குள்ளாகி தப்பிவந்த ஒருவர் தெரிவித்துள்ளார்.

இந்த நோய் நிலைமைபற்றி மேலும் தெரியவருவதாவது: வயிற்றோட்டநோய் பரவலாக மக்களிடம் காணப்படுகின்றது. ஆனால் இந்த நோயைக் கட்டுப்படுத்துவதற்கு அப்பகுதிகளில் எந்தவித மருத்துவ வசதிகளும் இல்லை. அப்பகுதி மக்கள் தமக்குத்தெரிந்த கை மருந்துகளையே பிரயோகித்து வருகின்றனர். அத்துடன் அங்கு நோய்க்கொடுமையால் அல்லற்படும் தமிழ் மக்களை ஆதரவுசெய்ய எந்தஒரு பொது நிறுவனங்களும் முன்வராததால் தொடர்ந்து உயிர்கள் நோய்களால் பறிக்கப்பட்டு வருகிறது எனவும் அங்கிருந்து கிடைத்துள்ள செய்திகள் தெரிவிக்கின்றன. (லோ)

# தொழிற்சாலையை இயக்க தொழிலாளர் முயற்சி

(குருநகர்)

சிநோர் தொழிற்சாலைகளை மீண்டும் இயக்குவதற்கு தொழிலாளர் சபை கொழும்பு சென்றுள்ளது யாழ். அரச அதிபருடன் தொடர்பு கொண்டு முயற்சிகள் மேற்கொண்டு வருகிறது.

எதிர்வரும் 14ஆம் திகதி யாழ். வரும் அரச அதிபர் இது சம்பந்தமான முடிவுகளுடன் வருவார் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

அரச அதிபரின் யாழ் வருகையை அடுத்து சிநோர் தொழிலாளர் சபை தமது நிலைப்பாட்டை விளக்கிய கையெழுத்துக்கள் அடங்கிய மகஜரை அவர் மூலமாக கொழும்பு மேலிடத்திற்கு அனுப்பி வைக்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

குருநகர், காரைநகர் சிநோர் தொழிற்சாலை ஊழியர்களின் வேதனம் இடைநிறுத்தப்பட்டதுடன் அமைய ஊழியர்களை வேலையில் இருந்து நிறுத்தும்படியும் கொழும்பு மேலிடம் அறிவித்திருந்தது தெரிந்ததே. (21)

## மாவீரர் கண்காட்சியில் மாணவர் ஆக்கம்

(யாழ்ப்பாணம்)

மாவீரர் தினத்தை முன்னிட்டு வடமராட்சி, தென்மராட்சி, வலிகாமம், தீவகம் ஆகிய பகுதிகளில் நடைபெற இருக்கும் கண்காட்சியில் யாழ் கல்வித் திணைக்கள முறைசாராக் கல்விப் பிரிவு மாணவர்களின் ஆக்கங்களும் இடம் பெறவுள்ளன. இக்கண்காட்சிகள் எதிர்வரும் 21ஆம், 22ஆம், 23ஆம் திகதிகளில் நடைபெறும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச)

# தீவுப் பகுதியில் பாடசாலைக்கு மாணவரைஅனுப்பக்கோரிக்கை

(ஊர்காவற்றுறை)

தீவகப் பெற்றோர் தமது பிள்ளைகளை உடனடியாக பாடசாலைகளுக்கு அனுப்பி கல்வி பயில்வதை உறுதிப்படுத்தும்படி கேட்கப்படுகின்றார்கள். இன்றைய போராட்ட சூழ்நிலையில் மாணவர்களது கல்வி எக்காரணம் கொண்டும்தடைப்படலாகாது பிள்ளைகளின் கல்வி பெற்றோர்களினதும், ஆசிரியர்களினதும் கையில்தான் தங்கியுள்ளது. நெருக்கடி மிக்க சூழ்நிலையிலும் எமது தமிழீழ மாணவர்களின் கல்வி எந்த விதத்திலும் பாதிக்கப்படக்கூடாது. தற்போது தீவக பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. பாடசாலைகளுக்கு சமுகமளிக்காத மாணவர்கள் உடனடியாக தமது கல்வியைத் தொடக்கவும். மேற்கண்ட வேண்டுகோளொன்றை தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்க தீவக பொறுப்பாளர்கள் விடுத்துள்ளார்கள். (15)

## கனகரத்தினம் வித்தியாலயத்தில் எழுச்சி விழா

(யாழ்ப்பாணம்)

யாழ். கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தில் இன்று (12-11-90) பிற்பகல் 2 மணியளவில் விடுதலைப்புலிகள் முக்கியஉறுப்பினர்களான பகின்சித்திரா ஆகியோர்கலந்து கொள்வார்கள். அனைவரும் சமுகம் தரும்படி அழைக்கப்படுகின்றனர்.

## வீடுகள் தகர்ப்பு

(தெல்லிப்பழை)

நேற்றையதினம் வலிகாமம் வடக்குப் பகுதியில் நிலைகொண்டுள்ள சிறிலங்கா இராணுவத்தினர் சாந்தைச் சந்திப் பகுதியில் 5ற்கும் மேற்பட்ட வீடுகளைக் குண்டு வைத்துத் தகர்த்தனர்.

இதன்போது ஏற்பட்ட ஒலி பலமைல்கள் சுற்றளவை அதிர வைத்தது. (ச)

# அரசாங்க வேலைகள்வழங்க நியமனக் குழு அமைப்பு

அரசாங்க வேலைகளை வழங்க நியமனக்குழு அமைக்கப்படும் என்றும் அந்த நியமனக் குழுவில் அரசியல்கட்சிப் பிரதிநிதிகளாக பாராளுமன்ற உறுப்பினர்கள் அங்கம் வகிப்பார்கள் என்ற திட்டத்தை ஜனாதிபதி ஆர். பிரேமதாஸா அறிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் சகல அரசியல் கட்சிகளினதும் பிரதிநிதிகளைக் கொண்ட நியமனக்குழுவொன்றின் மூலம் முக்கிய அரசாங்க சேவைகள் நியமனங்களைச் செய்வதற்கான திட்டத்தை ஜனாதிபதி முன் வைத்தார்.

இதனை அமுல்படுத்துவதற்கான சட்டவரைகள் இப்பொழுது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அத்துடன் இது தொடர்பான சிபார்சு இளைஞர் ஆணைக்குழுவினால் செய்யப்பட்டிருந்தது.

# சந்திரசேகர் மீது 16 ஆம் திகதி நம்பிக்கை வாக்கெடுப்பு

(டில்லி)

இந்தியாவின் புதிய பிரதமர் சந்திரசேகர் எதிர்வரும் 16 ஆம் திகதி மக்கள் அவையில் நம்பிக்கை கோரும் பிரேரணையைச் சமர்ப்பித்துத் தமது பெரும்பான்மை பலத்தை நிரூபிக்க இருக்கிறார். எதிர்வரும் 20ஆம் திகதிக்கு முதல் தனது பலத்தை சபையில் நிரூபிக்க வேண்டும் என ஜனாதிபதி ஆர் வெங்கட்ராமன் பிரதமருக்கு காலக்கெடு வழங்கியிருந்தார்.

# கொள்கையில் வேறுபாடு, நிர்வாக 'மோதல் இருக்காது

-கருணாநிதி

(சென்னை)

''மத்திய அரசாங்கத்துடன் கொள்கையில் கருத்து வேறுபாடுகள் இருந்தாலும் நிர்வாக ரீதியில் எந்தவித மோதலும் இருக்காது, இருக்கத் தேவையில்லை'' என தமிழ் நாடு முதலமைச்சர் மு. கருணாநிதி தெரிவித்தார்.

நேற்று முன்தினம் சென்னையில் நடைபெற்ற செய்தியாளர்கள் மாநாட்டில் 'புதிதாக பதவிப் பொறுப்பேற்ற அரசாங்கத்துடன், தமிழ்நாடு மாநில அரசாங்கத்தின் உறவு எப்படி இருக்கும்?' என நிருபர் ஒருவர் கேட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே இவ்வாறு அவர் தெரிவித்தார்.

தமிழ்நாட்டின் முன்னேற்றத்திற்கும், வளர்ச்சிக்கும் மத்தியில் புதிதாக பொறுப்பேற்றிருக்கும் ஜனதா தள சோசலிச அரசாங்கம் துணையாக இருக்கும் என்று தான் நம்புவதாகவும் கருணாநிதி தெரிவித்தார்.

இந்த அரசாங்கம் நிலையான ஆட்சியை அமைக்க வேண்டுமென்பதே த ா ! ஆசை என்றும் அவர் தெரிவித்தார்.

# தாய்லாந்து விமானத்தை கடத்திய மாணவர் சரண்

(கல்கத்தா)

நடுவானில் வைத்துக் கடத்தப்பட்ட தாய்லாந்து விமானத்தில் பிரயாணம் செய்த பயணிகள் 220 பேரும் விசேட விமானமூலம் ரங்கூனுக்கு அனுப்பப்பட்டுள்ளனர். கடத்தல்காரர்களான மூவரும் ரங்கூன் பல்கலைக்கழக மாணவர்கள் ஆவர். அதேவேளை விமானச் சிப்பந்திகளும் விசாரணைக்காக கல்கத்தாவில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

கடத்தல்காரர்களைத் தம்மிடம் ஒப்படைக்கும்படி பர்மிய அரசாங்கம் விடுத்த வேண்டுகோளை இந்தியா நிராகரித்துள்ளது. பர்மாவில் அரசியல் கைதிகளை விடுவிக்கும்படியான கோரிக்கையை சர்வதேச சமூக மட்டத்தில் வெளிப்படுத்தவே தாம் விமானத்தைக் கடத்தியதாக விமானத்தைக் கடத்திய மாணவர்கள் பத்திரிகையாளரிடம் தெரிவித்தனர். இவர்கள் பர்மிய விடுதலை இயக்கம் ஒன்றைச் சேர்ந்தவர்கள்.

### சந்திரசேகர் கருணாநிதி சந்திப்பு

(சென்னை)

தமிழ்நாட்டு முதலமைச்சர் மு. கருணாநிதி விரைவில் புதுடில்லிக்குச் செல்வார். அப்போது புதிய பிரதமர் சந்திரசேகரைச் சந்திக்கப்போவதாகவும் அவர் கூறினார்.

### அங்கக் குறைவுடன்

இப்போதுள்ள சூழ்நிலையில் ஏற்பட்டுள்ள அதிர்ச்சியால் தான் இவ்வாறு குறைபாடுள்ள குழந்தைபிறந்துள்ளதாகக் கூறப்படுகிறது. (86)

### நாம் கொடுக்க

கிழக்கு மாகாணத்திலுள்ள அகதி முகாம்களிலிருந்து தமிழ்ப் பெண்கள் முஸ்லிம்களால் கடத்திச் செல்லப்பட்டு மானபங்கப்படுத்தப்படுகிறார்கள். அண்மையில் தமிழ்ப் பெண் ஒருத்தி முஸ்லிம்களால் மானபங்கப்படுத்தப்பட்டபின் கல்லால் எறிந்து கொலை செய்யப்பட்டிருக்கிறாள்.

எமது இயக்கத்திலிருந்த பல முஸ்லிம் இளைஞர்கள் ஆயுதங்களுடன் இயக்கத்தை விட்டு ஓடி இராணுவத்துடன் சேர்ந்து எமது முகாம்களைக் காட்டிக் கொடுப்பதிலும், எம்மை அழிப்பதிலும் தீவிரமாக ஈடுபட்டு வருகிறார்கள். தமிழருக்கு எதிராகச் செயற்படும் முஸ்லிம்களுக்கு அரசு சகல உதவிகளையும் செய்து வருகின்றது.

கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம்களின் நிலங்கள் அரசாங்கத்தினால் பறிக்கப்பட்டன. அப்போதும் முஸ்லிம்களோ, அன்றி அவர்களின் தலைவர்களோ அரசிற்கு எதிராகப் போராட்டம் ஒன்றைநடாத்த முன்வரவில்லை. போராட்டத்திற்குப் பதிலாக முஸ்லிம் தலைவர்கள் சிங்களக் கட்சிகளின் பின்னாலேயே சுற்றிச் சுற்றி வந்தார்கள். இன்று அவர்களின் பின்னால் நின்று கொண்டு தமிழர்களைப் படுகொலை செய்து அவர்களை கிழக்கு மாகாணத்தில் இல்லாது செய்வதற்காக ஆயுதம் ஏந்திப் போராடுகிறார்கள் என்றும் தெரிவித்தார்.

### திருட்டு

(தெல்லிப்பளை)

தெல்லிப்பளை பாவலர் துரை வீதியில் உள்ள வீடு ஒன்றில் இருந்து சுமார் இருபத்தையாயிரம் ரூபா பெறுமதியான வீட்டுப்பாவனைப் பொருள்கள் திருடப்பட்டுள்ளன.

கடந்த மூன்றாம் திகதி இரவு இவ்வீட்டில் இருந்தவர்கள் இடம் பெயர்ந்து சென்ற சமயம் இக்கொள்ளைச்சம்பவம் இடம் பெற்றுள்ளது. 'மலர்பவனம்'' என்ற, திருமதி அ. பங்கராசா என்பவரின் வீட்டிலேயே இக்கொள்ளை இடம் பெற்றது. (ச)

### இளிநொச்சி களஞ்சியத்தில் பற்றாக்குறை

# பாதிக்கப்பட்டோருக்கே 2-ஆம் கட்ட நிவாரணம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் உள்ள உணவுக் களஞ்சியத்தில் உணவுப் பொருள் தட்டுப்பாடு கடுமையாக நிலவி வருவதால் மோசமாகப் பாதிக்கப்பட்ட கிராமங்களுக்கே இரண்டாம் கட்ட உலர் உணவு வழங்கப்பட உள்ளது.

கிளிநொச்சியில் அரிசி இல்லாததால் முதலாம் கட்ட உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டபோது பல கிராமங்களில் வாழும் மக்களுக்கு அரிசி வழங்கப்படவில்லையாம்.

இரண்டாம் கட்ட உணவுப் பொருட்கள் வழங்கப்படும் போது மாவு, சீனி, பருப்பு, பால்மா, தேங்காயெண்ணெய் போன்றவையே வழங்கப்படவுள்ளதாம்.

கிளிநொச்சியில் போதியளவு நெல் கையிருப்பில் இருந்த போதும், அதைக் குற்றி அரிசி ஆக்க மின்சாரவசதி இல்லாததால் அரிசி ஆலைகள் எதுவும் இயங்காதுள்ளதாலேயே இங்கு அரிசிக்குத் தட்டுப்பாடு நிலவி வருகிறது. (49)

## ஜே-234 உலர் உணவு அட்டைப் பதிவு

(கொழும்புத்துறை)

காங்கேசன்துறை மத்தி ஜே /234 இராம சேவையாளர் பிரிவில் உள்ள மக்களுக்கு உலர் உணவு அட்டை பதிவு வேலைகள் மல்லாகம் விசாலாட்சி வித்தியாலயத்தில் நடைபெற்று வருகின்றது.

இந்த உலர் உணவு அட்டை பதிவுக்கான இறுதித் திகதி நாளை பதின்மூன்றாம் திகதி செவ்வாய்க்கிழமை என காங்கேசன்துறை மத்தி ஜே /234 இராமசேவையாளர் அறியத் தருகின்றார். (24)

### கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

பாடசாலை நடைமுறைப் பிரச்சினைகள் பற்றியும், மாவீரர் வாரம் சம்பந்தமாகவும் கலந்துரையாடுவதற்கு வடமராட்சி கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளரையும், கொத்தணி அதிபர்களையும், பாடசாலை அதிபர்களையும் செவ்வாய்க்கிழமை காலை 10. 00 மணிக்கு வேலாயுதம் மகாவித்தியாலய மண்டபத்தில் சகலரும் தவறாது சமுகம்தரும் வண்ணம் மாவீரர் செயலகப் பொறுப்பாளரால் வேண்டப்படுகின்றனர்.

### வைத்திய

தற்போது நாளொன்றுக்கு 250 இற்கு மேற்பட்ட வெளிநோயாளர்கள் சிகிச்சை பெற வருகிறார்கள். ஆனால் ஒரே ஒரு வைத்தியர் மட்டுமே கடமையாற்றுகிறார். இவர் தனி ஒருவரே வெளிநோயாளரைப் பார்வையிடல், உள்ளகநோயாளர்களைப் பார்வையிடலுல், (வாட்) சிகிச்சை அளித்தல், நிர்வாகக் கடமைகளை மேற்கொள்ளல் ஆகியவற்றுடன் இளவாலையிலுள்ள இளை மருந்துச்சாலையில் நோயாளரைப் பார்வையிடல் போன்ற கடமைகளையும்மேற் கொண்டுவருகிறார் (ச)

### புத்தளத்தில்

ஆகியவற்றிற்குக் கடுமையான தட்டுப்பாடு நிலவுவதால் அப்பொருள்களைக் கொழும்பில் இருந்து கொண்டுவருவதற்காகச் சென்றதாம்.

மேற்படி ஸ்தாபன லொறி புத்தளத்தில் வைத்து வழிமறிக்கப்பட்டு ஒன்றரை இலட்சம் ரூபா ரொக்கப்பணமும், காசோலைகளும் பறிமுதல் செய்யப்பட்டதாம். இது சம்பந்தமாகப் புத்தளம் பாராளுமன்ற உறுப்பினருக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாம். (49)

### அதிபர்களுக்கான

மல் இவ் வாய்ப்பைப் பயன்படுத்தி 20-11-90க்கு முன் விண்ணப்பிக்கும் படி பிரதேச கல்விப் பணிப்பாளர் இரா. சுந்தரலிங்கம் கோரியுள்ளார்.

### விமானங்கள்

புகாரை மறுத்துள்ளார். ஆஸ்பத்திரிக்கு சமீபமாகவே தாக்குதல் நடத்தப்பட்டது என்றும், ஆஸ்பத்திரி மீதோ, ஆஸ்பத்திரி வளவுக்குள்ளோ தாக்குதல்நடத்தப்படவில்லை என்றும் கூறினார்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் வைமன் வீதி, 31-ஆம் இலக்கத்திலுள்ள '' ஈழநாதம் '' பணிமனையில் 1990 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 12 ஆம் தேதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.